சுருக்கம்

வேளாண்மைத் துறை – வேளாண்மைப் பொறியியல் – வேளாண்மை பொறியியல் துறையின் கீழ் செயல்படும் 74 வேளாண் உபகோட்டத்திற்கு அதிக மதிப்புடைய கனரக இயந்திரங்கள் வாங்குவதற்கு நிதி ஒப்பளிப்பு மற்றும் ஒட்டுநர் பணியிடங்கள் ஒப்பளிப்பு ஆணை வழங்கப்பட்டது – ஓட்டுநர் பணியிடங்களில் பணியாளர்களை தொகுப்பூதியத்தில் அமர்த்தி ஊதியம் வழங்கிட 2012-13-ம் நிதியாண்டில் நிதி ஒப்பளிப்பு – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

வேளாண்மை (வே.பொ.1) துறை

அரசாணை (நிலை) எண். 164 நாள்:31.7.2012

திருவள்ளுவர் ஆண்டு 2043
ஆடி திங்கள் 16ம் நாள்

படிக்க:

1. அரசாணை (நிலை) எண். 220, வேளாண்மை (வே.பொ.1) துறை, நாள்:25.11.2011
2. தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) கடித எண்.T1/12720/2012, நாள்:16.4.2012.

-----

**ஆணை:**

மேலே 1-ல் படிக்கப்பட்ட அரசாணையில், 2011-12-ம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட நிதி நிலை அறிக்கை தாக்கல் செய்யும் போது சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அறிவிப்பின்படி, 2011-12-ம் ஆண்டிற்கு வேளாண்மைப் பொறியியல் துறையின் கீழ் செயல்படும் 74 வேளாண் உபகோட்டத்திற்கு அதிக மதிப்புடைய கனரக இயந்திரங்களை வாங்குவதற்கு ரூ.20.00 கோடிக்கு நிதி ஒப்பளிப்பு வழங்கியும், மேலும் பணியிடங்களை பொருத்தமட்டில் விசைத்துளை கருவி மேற்பார்வையாளர் மற்றும் துடைப்பாளர் பணியிடங்களை தவிர்த்து கீழ்கண்டவாறு மற்ற பணியாளர்களை தொகுப்பூதியத்தில் பணியமர்த்திக் கொள்ள ஆணை வெளியிடப்பட்டது:–

(i) புதியதாக வாங்கப்படவுள்ள இயந்திரங்களை இயக்குவதற்கான பணியாளர்களை இயன்ற வரை மறுபணிபெயர்ச்சி (Redeployment) மூலம் நிரப்பப்பட வேண்டும்.

(ii) கதிர் அறுவடை இயந்திரத்தை இயக்குவதற்கான 24 முதுநிலை உழுவை ஒட்டுநர் மற்றும் துடைப்பாளர் (Senior tractor driver – cum – cleaner) பொருத்த வரை ரூ. 8,000/- மாத தொகுப்பு ஊதியத்தில் அமர்த்தப்பட வேண்டும்.

(iii) கனரக உழுவை இயந்திரங்களை இயக்குவதற்கான இளநிலை உழுவை ஒட்டுநர் மற்றும் துடைப்பாளர் (Junior tractor driver – cum – cleaner) பொருத்த வரை 25 அல்லது மீதமுள்ள எண்கள் (மறுபணிபெயர்ச்சி மூலம்

நிரப்பப்பட்ட பணியிடங்களை தவிர்த்து) பணியிடங்களை ரூ. 7,000/- மாத தொகுப்பு ஊதியத்தில் அமர்த்துதல் வேண்டும்.

(iv) விசைத்துளை கருவிகளை இயக்குவதற்கான 10 துளைஞர்கள் (Driller) ரூ. 8,000/- மாத தொகுப்பூதியத்திலும் மற்றும் 10 உதவி துளைஞர்கள் (Assistant Driller) ரூ.7,000/- மாத தொகுப்பூதியத்திலும் அமர்த்தப்பட வேண்டும்.

2. மேலே 2-ல் படிக்கப்பட்ட கடிதத்தில், தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) அவர்கள் அரசாணை (நிலை) எண்.220, வேளாண்மை (வே.பொ.1) துறை, நாள்:25.11.2011-ல் வெளியிடப்பட்ட ஆணையின்படி, அதிக மதிப்புடைய 47 எண்கள் கனரக இயந்திரங்களைக் கொண்டு வேளாண்மை பொறியியல் துறையின் உழுவை வாடகை திட்டத்தினை செயல்படுத்திட மார்ச்' 2012-ல் இயந்திரங்கள் வாங்கப்பட்டன என்றும், இந்த இயந்திரங்களை இயக்குவதற்கு தேவையான பணியாளர்கள் மேற்கண்ட அரசாணையில் ஒப்பளித்தவாறு வேலை வாய்ப்பகம் மூலம் நிரப்பிட உரிய நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் இந்த பணியிடங்களில் வரும் நாட்களில் பணியாளர்கள் பணி மேற்கொள்வார்கள் எனவும், எனவே இப்பணியாளர்களுக்கு 2012-13-ம் நிதியாண்டில் ஊதியம் கீழ்கண்டவாறு வழங்கிட வேண்டியுள்ளதால், இதற்கு தேவையான நிதி ஒதுக்கீடு ரூ.42.12 இலட்சம் ஒப்பளிப்பு வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

| வ எண். | விபரம் | கணக்கீடு | தொகை (ரூபாயில்) |
|---|---|---|---|
| 1 | 25 உழுவை இயந்திரங்களை இயக்குவதற்கு 25 இளநிலை உழுவை ஓட்டுநர் மற்றும் துடைப்பாளர் (Junior Tractor Driver cum Cleaner) பணியிடம் தொகுப்பூதியம், ஒரு மாதத்திற்கு ஒரு நபருக்கு ரூ.7000/- வீதம் (25 நபர்களுக்கு) 12 மாதங்களுக்கு வழங்கப்பட வேண்டியுள்ளது. | 25x7000x12 | 21,00,000.00 |
| 2 | 2 எண்கள் நெல்நாற்று நடும் இயந்திரங்கள் இயக்கிட 2 முதுநிலை உழுவை ஓட்டுநர் மற்றும் துடைப்பாளர் (Senior Tractor Driver cum Cleaner) பணியிடம் தொகுப்பூதியம், ஒரு மாதத்திற்கு ஒரு நபருக்கு ரூ.8000/- வீதம் (இரண்டு நபர்களுக்கு) 12 மாதங்களுக்கு வழங்கப்பட வேண்டியுள்ளது. | 2x8000x12 | 1,92,000.00 |
| 3 | 20 எண்கள் கதிர் அறுவடை இயந்திரங்களை இயக்கிட 20 முதுநிலை உழுவை ஓட்டுநர் மற்றும் துடைப்பாளர் (Senior Tractor Driver cum Cleaner) பணியிடம் தொகுப்பூதியம், ஒரு மாதத்திற்கு ஒரு நபருக்கு ரூ.8000/- வீதம் (இருபது நபர்களுக்கு) 12 மாதங்களுக்கு வழங்கப்பட வேண்டியுள்ளது. | 20x8000x12 | 19,20,000.00 |
| | மொத்தம் | | 42,12,000.00 |

3. மேலே பத்தி 2–ல் உள்ள தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) அவர்களின் கருத்துருவை அரசு கவனமாக பரிசீலித்து ஏற்கலாம் என முடிவு செய்து அவ்வாறே 2012-2013–ம் ஆண்டிற்கு வேளாண்மைப் பொறியியல் துறையின் கீழ் செயல்படும் 74 உபகோட்டத்திற்கு அதிக மதிப்புடைய 47 எண்கள் கனரக இயந்திரங்களான உழுவை, நெல்நாற்று நடும் இயந்திரம் மற்றும் கதிர் அறுவடை இயந்திரங்களை இயக்குவதற்கு 47 இயக்கிகளுக்கு 2012-13-ம் நிதியாண்டில் தேவையான தொகுப்பூதியம் ரூ.42,12,000/- (ரூபாய் நாற்பத்து இரண்டு இலட்சத்து பன்னிரெண்டாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணையிடப்படுகிறது.

4. மேலே பத்தி 3-ல் ஒப்பளிக்கப்பட்ட பணியாளர் செலவினத்திற்கான கூடுதல் நிதியொதுக்கம் 2012-13 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு/இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் வழங்கப்படும். அவ்வாறு வழங்குவதை எதிர்நோக்கி இச்செலவினத்தினை மேற்கொள்ள தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) சென்னை அவர்களுக்கு அதிகாரம் அளித்து ஆணையிடப்படுகிறது. 2012-13 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு/இறுதி திருத்த நிதியொதுக்க கருத்துரு நிதித்துறைக்கு அனுப்பும்போது இச்செலவினத்தை தவறாமல் சேர்த்து அனுப்புமாறு தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியில்) சென்னை அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

5. மேலே பத்தி 3ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்கண்ட கணக்கு தலைப்பின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2401–00- பயிர்வளர்ப்பு -113 வேளாண்மைப் பொறியியல் பன்னிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்டப்பணிகள் –II மாநிலத் திட்டம் -JI- டிராக்டர் மற்றும் அறுவடை செய்யும் இயந்திரங்கள் வாடகைக்கு விடும் திட்டம்-33 தொழில் முறை சிறப்புப் பணிகளுக்கு தொகை கொடுத்தல்-04 ஒப்பந்த ஊதியம்.

(த.தொ.கு. 2401-00-113-JI-3344)

6. இவ்வரசாணை நிதித்துறையின் ஒப்புதலை அ.சா.கு.எண்.38632/வேளாண்மை/2012, நாள்:20.7.2012 மற்றும் நிதியொதுக்க பேரேடு எண். 753 (எழுநூற்று ஐம்பத்து மூன்று) பெற்று வெளியிடப்படுகிறது.

/ஆளுநரின் ஆணைப்படி /

சந்தீப் சக்சேனா
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு செயலாளர்

பெறுநர்

தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்), சென்னை –35.
மாநில முதன்மை கணக்காயர், சென்னை –18.
மாநில முதன்மை கணக்காயர், சென்னை –18. (பெயரில்).
சம்பள கணக்கு அலுவலர், சென்னை-35.
ஆணையர், கருவூல கணக்கு அலுவலகம், சென்னை–15.

நகல்

நிதி (வேளாண்மை / வ.செ. / பொது .II) துறை, சென்னை – 9.
தனிச்செயலர், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர், சென்னை–9.
இருப்புக்கோப்பு / உதிரிகள்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர்

31/7/12.